## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு
## சத்யம் உயிரினும் பெரிது

---

அன்று ஏகாதசி தினம். **திருக்குறுங்குடி** [திருநெல்வேலிக்கு அருகில் உள்ள விஷ்ணு ஸ்தலம்] நோக்கி அன்பர்கள் கூட்டம் சென்று கொண்டு இருக்கிறது. அழகிய **தாமிரபரணி** ஆற்றின் கரை ஓரம் இறைவனின் பெருமைகளைப் பலவாறு பாடிக் கொண்டே அன்பர்கள் செல்கிறார்கள்.

**நம்பாடுவான்** என்ற இளைஞன் திருக்குறுங்குடி நம்பி [அவ்வூர்ப் பெருமாளின் பெயர்] மீது அளவற்ற பக்தி உடையவன். அவனுக்கு ஒரு பழக்கம். அதாவது ஒவ்வொரு ஏகாதசி அன்றும் அவ்வூர் நம்பியின் முன் அவன் மிக அழகாகத் தம்பூராவை மீட்டிக் கொண்டே **"கைசிக புராணம்"** பாடுவான். அதில் உள்ள இறைவனின் பெருமைகளில் மனதை ஈடுபடுத்தி மெய்யுணர்வில் விஷ்ணுவுடன் ஆனந்திப்பான். அதை விட முக்கியம் அவன் கடைப்பிடிக்கும் மிக முக்கிய கொள்கை! அது தான் சத்யம் தவறாமை.

இறைவனும் சத்யமும் வேறு வேறு இல்லை என்பதை உணர்ந்த நம்பாடுவான் நேர்மை தவறாத இளைஞன். அவன் வாழ்க்கையை அவன் ஊரில் பலரும் போற்றினர்.

ஸ்ரீவிஷ்ணு சஹஸ்ரநாமத்தை ஓதிக் கொண்டே தம் தம்புராவுடன் அவனும் செல்கிறான். ஆற்றைத் தாண்ட வேண்டும், அதற்கு முன் ஒரு பெரிய அடர்ந்த முள் காடு. அதற்குள் அவன் நுழைந்து நடக்கையில் அவன் முன் யாரோ "ஜங்" என்று வந்து குதித்தது போல இருந்தது. யார் அது?

ஆஹா! அது ஒரு பேய். [பேய் என்பது மனதில் சிறிதும் அமைதி இல்லாமல் இறந்தவர்களின் எண்ணங்களே] பக்கத்து சுடுகாட்டில் இருந்து இங்கு வந்து விட்டது.
"ஹேய்! தம்பீ! இன்று உன்னை விடவே மாட்டேன், உன்னுள் புகப் போகிறேன், என் ஆசைகளை ஊருக்குள் சென்று நிறைவேற்றிக் கொள்வேன்!" என்றது.

இறைவனிடம் சதா மெய்யுணர்வில் இருக்கும் நம்பாடுவான் சற்றும் பயக்கவில்லை.
"ஹே! மனதில் ஷாந்தி இல்லாமல் இறந்து போனவனின் ஜீவனே! எதற்கு இன்னும் மனதில் ஆசைகள்? அவற்றை விட்டுவிடு! பகவானிடம் உன் எண்ணங்களை வைத்து விட்டால் அடுத்து சீக்கிரம் ஒரு பிறவி கிடைக்குமே?!" என்றான்.

"அடேய்! என்னை முட்டாள் என்று நினைத்தாயா? சென்ற பிறவியில் நான் யார் தெரியுமா? பெரிய விவசாயி. எனக்கும் பக்தி எல்லாம் உண்டு, இதோ இப்போது உன்னுள் வருகிறேன்!" என்று மிரட்டியது பேய்.

"ஹே! பேயே! அவசியம் என்னுள் நீ இருக்க இடம் தருகிறேன், ஏன் என்றால் இந்த உடல் பகவான் உடையது, அவர் உனக்கு இடம் தருவாரா தெரியாது! அதற்கு முன் என் கடமையைச் செய்து விட்டு வர அனுமதி தா!" என்றான்.

"அப்படி என்ன உனக்குப் பெரிய கடமை?" என்றது பேய்.

"ஒவ்வொரு ஏகாதசிக்கும் திருக்குறுங்குடி நம்பிக்குக் கைசிக புராணம் பாடுவது என் கடமை, அப்போது பல அன்பர்கள் அதைக் கேட்பர், பல ஆன்மீக விஷயங்களையும் புரிந்து கொள்வர். இன்று அதை நிறைவேற்றிவிட்டு வருகிறேன்." என்றான்.

"திருக்குறுங்குடி நம்பியின் அருளால் நீ வரமாட்டாயடா! என்னை ஏமாற்றப் பார்க்கிறாய்" என்று சத்தம் போட்டது பேய்.

"பேயே! என் பகவான் மீது சத்யம்! நான் திரும்பி வருவேன். அப்படி வராவிட்டால் நானும் இறந்தபின் பேயாக அலைவேன்! வழிவிடு" என்று கூறிட, பேயும் நம்பாடுவானுக்கு வழிவிட்டது.

நம்பாடுவான் சற்றும் பயம் இன்றி கோயில் புகுந்தான். இறைவன் முன் கூட்டத்தில் மிக அழகாகக் கைசிக புராணம் பாடி பல ஸ்ருதியை [இதைப் பாடுவதால் என்ன பலன் என்று விவரிக்கும் பகுதி] மட்டும் பாடாமல், மக்களுக்கும் சில முக்கிய ஆன்மீக விஷயங்களை விளக்கினான். இறைவனை நமஸ்கரித்த பின் தான் சத்யம் செய்தபடி முள் காட்டுக்கு வந்தவுடன் அவன் முன் பேய் நின்று முதலில் அவனைப் பாராட்டியது.

"ஹே! பக்தா! கைசிக புராணத்தின் கடைசியில் எவ்விதப் பலன் அதைப் பாடுவதால் கிடைக்கும் என்று கூறி இருக்குமே? அதைச் சொல்!" என்றது பேய்.

"***ஹே! பேயே! இப்போது அதைச் சொல்ல முடியாது,இன்று அப்பகுதியை நானும் கோயிலில் பாடவில்லை, அதைச் சொன்னால் இறைவன் உன்னைக் கொல்வார். அப்போது உன் ஆசை நிறைவேறாது.எனவே விரைவில் என்னைக் கொண்டு என்ன வேண்டுமோ செய்து கொள்!***" என்றான்.

இதைக் கேட்டதும் அப்பேய் மனம் மாறியது, இளைஞனின் சத்யத்தின் வலிமையை உணர்ந்தது. அதைவிடத் தனக்குக் காவலாகும் புராணத்தையும் அவன் தனக்காகப் பயன்படுத்திக் கொள்ளாத மிக உயர்ந்த த்யாக உணர்வை எண்ணி எண்ணி வெட்கப் பட்டது.

"ஹே! பக்தா! உன்னால் எனக்கு ஆத்ம ஷாந்தி இன்று ஏற்பட்டுவிட்டது! உன் சத்யம் என்னை வென்றது. உன் புராணம் உன்னைக் காத்தது! என்னை மன்னித்து விடு, அடுத்த பிறவியில் உன்னைப் போல உயர்ந்த பக்தன் ஆகும் பேற்றை எனக்கு அருளும்படி இப்போது நீ என்முன் எனக்காகக் கைசிக புராணம் சொல்!" என்று மனமார வேண்டிட, அதன் ஆத்ம ஷாந்திக்காக நம்பாடுவானும் பெருமாளை த்யானித்துப் பாடிட, அதைக் கேட்டு மிக்க விழிப்புணர்வு கொண்ட அப்பேயின் எண்ணங்கள் ஓய்ந்து போயின.

சத்யத்தின் பெருமையை என்ன என்று சொல்வதோ? மேலும் பக்தி நூல்களின் பலனும் எப்படி அதில் சொன்னபடி அதை விழிப்புணர்வுடன் பாராயணம் செய்பவர்களைக் காக்கிறது பாருங்கள்!

ஓம் நமோ நாராயணாய!